# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## பன்னிரெண்டாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி வரலாறு மதிப்பெண்கள்: 90

பகுதி - அ

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:- 20×1=20

1) பின்வரும் எது ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது?
அ) ஆங்கிலக் கல்விச் சட்டம் - 1843
ஆ) அடிமை முறை ஒழிப்பு - 1859
இ) சென்னை வாசிகள் சங்கம் - 1852
ஈ) இண்டிகோ கலகம் - 1835

2) சுப்பிரமணிய பாரதி குறித்த பின்வரும் எந்த கூற்று தவறானது?
அ) பாரதி சுதேசமித்திரன் இதழின் துணை ஆசிரியராக இருந்தார்.
ஆ) பாரதி திலகரின் Tenets of New Party என்ற நூலை தமிழில் மொழிபெயர்த்தார்.
இ) பாரதியின் குருமணி (ஆசிரியர்) சுவாமி விவேகானந்தராவார்.
ஈ) பாரதி பெண்களுக்கான 'சக்ரவர்த்தினி' என்ற இதழின் ஆசிரியராக இருந்தார்.

3). அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸின் முதல் தலைவர் யார்?
அ) பி.பி.வாடியா ஆ) ஜவஹர்லால் நேரு இ) லாலாலஜபதிராய் ஈ) சி.ஆர்.தாஸ்

4) பின்வரும் நிகழ்வுகளைச் சரியான காலவரிசைப்படி அமைத்து கொடுக்கப்பட்டுள்ள விடைகளிலிருந்து சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்.
i) கேதா சத்தியாகிரகம் ii) சம்பரான் இயக்கம்
iii) பிராமணரல்லாதார் இயக்கம் iv) வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகம்
அ) ii, iii, i, iv ஆ) iii, ii, i, iv இ) ii, i, iv, iii ஈ) ii, i, iii, iv

5) காந்தியடிகளின் தண்டி யாத்திரை பயணம் சென்றடைந்த ஆண்டு
அ) ஏப்ரல் 6, 1930 ஆ) மார்ச் 6, 1930 இ) ஏப்ரல் 4, 1939 ஈ) மார்ச் 4, 1930

6) கல்கத்தாவில் முதலாவது சணல் ஆலை தொடங்கப்பட்ட ஆண்டு
அ) 1855 ஆ) 1866 இ) 1877 ஈ) 1888

7) காங்கிரஸ் ஆட்சி முடிவுக்கு வந்த நாளினை முஸ்லீம் லீக் மீட்பு நாளாக கொண்டாடியது
அ) 22 டிசம்பர் 1940 ஆ) 5 பிப்ரவரி 1939
இ) 23 மார்ச் 1937 ஈ) 22 டிசம்பர் 1939

8) பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்குவதற்குத் திட்டம் வகுத்தவர் ஆவார்
அ) யாமமோட்டோ ஆ) ஸ்கூஸ்னிக்
இ) இரண்டாம் கெய்சர்வில்லியம் ஈ) ஹிரோஹிட்டோ

9) கூற்று: வெள்ளையனே வெளியேறு இயக்கம் அதன் குறிக்கோளை அடையவில்லை
காரணம்: அப்போதைய பிரிட்டிஷ் அரசு கடுமையான அடக்குமுறையைப் பின்பற்றியது
அ) கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று மற்றும் காரணம் சரி: காரணம் கூற்றை விளக்கவில்லை
இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு
ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

10) ஆந்திர மாநில கோரிக்கையினை முதன்முதலில் எழுப்பியவர்

அ) பொட்டி ஸ்ரீராமுலு ஆ) பட்டாபி சீத்தாராமையா

இ) கே.எம்.பணிக்கர் ஈ) டி.பிரகாசம்

11) அரசமைப்பு நிர்ணய சபையின் முதல் கூட்டம் எப்போது நடைபெற்றது?

அ) மார்ச் 22, 1949 ஆ) ஜனவரி 26, 1946

இ) டிசம்பர் 9, 1946 ஈ) டிசம்பர் 13, 1946

12) பூமிதான இயக்கத்தை தொடங்கியவர்

அ) ராம்மனோகர் லோகியா ஆ) ஜெயப்பிரகாஷ் நாராயணன்

இ) வினோபா பாவே ஈ) சுந்தர்லால் பகுகுணா

13) "இரு உலகங்களின் நாயகன்" என கொண்டாடப்பட்டவர் ஆவார்.

அ) சார்லஸ் ஆல்பிரட் ஆ) பிஸ்மார்க்

இ) மூன்றாம் நெப்போலியன் ஈ) கரிபால்டி

14) கீழ்க்கண்ட போப்பாண்டவர்களில் இத்தாலிய மறுமலர்ச்சிக்கு ஆதரவாகச் செயல்படாதவர் யார்?

அ) ஐந்தாம் நிக்கோலஸ் ஆ) இரண்டாம் ஜூலியஸ்

இ) இரண்டாம் பயஸ் ஈ) மூன்றாம் பால்

15) கீழ்க்கண்டவற்றில் எது சரியாக பொருத்தப்படவில்லை?

அ) மார்லோவ் - டிடோ ஆ) ஷேக்ஸ்பியர் - கிங்லியர்

இ) பிரான்சிஸ் பேக்கன் - நோவும் ஆர்கனும் ஈ) ரோஜர் பேக்கன் - டெக்கமரான்

16) கீழ்க்காணும் கூற்றுகளில் எது/எவை சரியானது / சரியானவை?

கூற்று I: பிரெஞ்சு சமூகத்தின் பெரும்பகுதி விவசாயிகளால் ஆனது

கூற்று II: பிரெஞ்சு விவசாயிகள் பண்ணை அடிமைகளாய் இருந்தனர்.

கூற்று III: வாரத்தில் சில நாட்களில் விவசாயிகள் தங்கள் பிரபுகளுக்காகச் சம்பளம் பெற்றுக் கொண்டு வேலை செய்தாக வேண்டும்.

அ) I மற்றும் II ஆ) II மற்றும் III இ) I மற்றும் III ஈ) அனைத்தும் சரி

17) இரண்டாம் சர்வதேசம் நகரில் துவக்கப்பட்டது

அ) பாரிஸ் ஆ) பெர்லின் இ) லண்டன் ஈ) ரோம்

18) கீழ்க்காண்பனவற்றுள் எந்நாடு மையநாடுகள் சக்தியில் அங்கம் வகிக்கவில்லை

அ) பல்கேரியா ஆ) ஆஸ்திரிய-ஹங்கேரி இ) துருக்கி ஈ) மான்டிநீக்ரோ

19) வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தின் சரத்துகளின்படி ஜனவரி 1935இல் ________ பகுதியில் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று முடிவானது.

அ) சூடட்டன்லாந்து ஆ) ரைன்லாந்து இ) சார் ஈ) அல்சேஸ்

20) "மூன்றாம் உலகம்" எனும் பதத்தை உருவாக்கியவர் ஆவார்

அ) ஆல்பிரட் சாவே ஆ) மார்ஷல் இ) மோலோடோவ் ஈ) ஹாரி ட்ருமன்

பகுதி - ஆ

**II.** ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண்.30க்கு கட்டாயம் விடையளிக்கவும்:- **7×2=14**

21) ஆங்கிலப் பாராளுமன்றத்திற்குச் சென்னைவாசிகள் சங்கத்தினர் அளித்த கோரிக்கைகள் என்ன?
22) தீவிர தேசியவாதம் 1908க்குப் பின்னர் ஏன் குறைந்தது?
23) கிலாஃபத் இயக்கம் துவங்குவதற்கான பின்னணி என்னவாக இருந்தது?
24) காந்தி இர்வின் ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது எது?
25) சிம்லா மாநாட்டின் பேச்சுவார்த்தைகள் ஏன் முறிந்தன?
26) அரசமைப்பு நிர்ணய சபையின் அமைப்பினை விளக்குக?
27) பாஸ்டன் தேநீர் விருந்து குறித்து நீங்கள் அறிந்ததென்ன?
28) ஸோல்வரின் (Zollverein) எனப்படுவதன் முக்கியத்துவம் யாது?
29) ஜட்லாந்துப் போரின் முக்கியத்துவம் பற்றி எடுத்தியம்புக
30) முக்கூட்டு நட்பு நாடுகளை எழுதுக.

பகுதி - இ

**III.** ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண்.40க்கு கட்டாயம் விடையளிக்கவும்:- **7×3=21**

31) மெக்காலேயின் இந்தியக் கல்வி குறித்த குறிப்புகளை ஆய்க
32) சுதேசி இயக்கத்தின் போது அதிகரித்த தனிநபர் வன்முறைகளுக்கான காரணங்களை எழுதுக.
33) 1920 மார்ச்சில் நடைபெற்ற பாரிஸ் அமைதி மாநாட்டில் கிலாஃபத் இயக்கத்தின் சார்பாக முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் என்ன?
34) தென்னிந்தியாவில் தொழிற்சங்கங்களின் வளர்ச்சிக்காகச் சிங்காரவேலர் ஆற்றிய பங்களிப்புக் குறித்து எழுதுக.
35) பஞ்சசீலக் கொள்கையின் ஐந்து கோட்பாடுகளை விளக்குக
36) இந்திய வேளாண்ண்மயின் பின்தங்கிய நிலைக்கான காரணங்கள் யாவை?
37) பிரான்ஸ் தும்மினால் ஐரோப்பாவிற்கு ஜலதோஷம் - தெளிவுபடுத்துக
38) இரண்டாம் உலகப்போரின் முக்கிய விளைவுகளை முன்னிலைப்படுத்துக.
39) சூயஸ் கால்வாய் சிக்கல் குறித்து சுருக்கமாக வரைக.
40) முதல் உலகப்போரின் முடிவில் தோல்வியுற்ற நாடுகளின் மீது திணிக்கப்பட்ட உடன்படிக்கைகள் ஏதேனும் மூன்றினை எழுதுக.

பகுதி - ஈ

**V.** அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளி:- **7×5=35**

41) அ) இந்தியாவில் தேசிய விழிப்புணர்வுக்குப் பிரிட்டிஷாரின் அடக்குமுறை மற்றும் இனவெறிக் கொள்கைகள், எந்த அளவிற்குக் காரணமாக இருந்தன?

*(அல்லது)*

ஆ) இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ.சிதம்பரத்தின் பங்கினைப் பற்றி எழுதுக.

42) அ) இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக

*(அல்லது)*

ஆ) பொருளாதார பெரும்மந்தம் ஏற்பட்டபோது சமூக, பொருளதார மற்றும் அரசியல் லட்சியங்கள் வெளிப்படுத்துவதில் இந்திய தேசிய காங்கிரசின் கராச்சி மாநாட்டின் முக்கியத்துவத்தை ஆய்வு செய்க.

43) அ) சுதந்திரப் போராட்டத்தை இந்திய தேசிய இராணுவ விசாரணை எவ்வாறு தீவிரப்படுத்தியது?

*(அல்லது)*

ஆ) இந்து, தேசியம், இஸ்லாமிய தேசியம் மற்றும் இந்திய தேசியம் ஆகியவை இந்தியப் பிரிவினைக்கு சமபங்காற்றியது எவ்வாறு?

44) அ) இத்தாலிய இணைவு எவ்வாறு சாத்தியமாக்கப்பட்டது?

*(அல்லது)*

ஆ) இந்திய விடுதலைக்குப் பின் ஏற்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில் நுட்ப நிறுவனங்கள் வளர்ச்சி குறித்து ஆய்க

45) அ) கிழக்கு பகுதிக்கு புதிய கடல் வழித்தடங்களை கண்டுபிடிப்பதில் போர்த்துகல் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளின் முன்முயற்சிகளை விவரிக்கவும். நவீன உலகின் பொருளாதார வரலாற்றில் ஏன் இது மிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக கருதப்படுகிறது?

*(அல்லது)*

ஆ) அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்கள், அதன் போக்கு, விளைவுகள் குறித்து விவாதிக்கவும்.

46) அ) இரண்டாம் உலகப்போர் ஏற்பட ஜெர்மனியும், ஹிட்லரும் எந்த அளவிற்குக் காரணமானவர்கள் என்பதனை ஆய்ந்து கூறுக.

*(அல்லது)*

ஆ) இரண்டாம் உலகப்போரில் நடைபெற்ற ஏதேனும் ஐந்து நிகழ்வுகளை காலக்கோடு வரைந்து காட்டுக

47) அ) அணிசேரா இயக்கத்தின் இலக்குகளையும் நோக்கங்களையும் கோடிட்டு காட்டவும்

*(அல்லது)*

ஆ) கொடுக்கப்பட்டுள்ள உலக வரைபடத்தில் முதல் உலகப்போரில் பங்குபெற்ற பின்வரும் நாடுகளை குறித்துக் காட்டுக.

1. ஜெர்மனி
2. இத்தாலி
3. அமெரிக்க ஐக்கிய நாடுகள்
4. துருக்கி
5. ஆஸ்திரியா

*******